MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — NUH National University Hospital — Alexandra Health — Eastern Health Alliance — Jurong Health — SingHealth

SINGHEALTH / PIL / T98R0

நோயாளி தகவல் கையேடு

# காதுக்குரும்பியை அகற்றுவதற்கான மருந்துகள்

செருமால் (Cerumol)
ஆலிவ் எண்ணெய் (Olive Oil)
சோலுவாக்ஸ் (Soluwax)
ட்ரோபெக்ஸ் (Tropex)
வாக்ஸால் (Waxsol)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

## இந்த மருந்துகள் காதுக்குரும்பியை (earwax) மென்மையாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் காதுக்குரும்பியை எளிதாக அகற்றலாம்.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

- கைகளைச் சோப்பு போட்டுக் கழுவுங்கள்.
- பாதிக்கப்பட்ட காது மேலே இருக்கும்படி படுத்துக் கொள்ளுங்கள், அல்லது தலையைச் சாய்த்துக் கொள்ளுங்கள்.
- பெரியவர்கள் என்றால், காது மடலை மேலாகவும் பின்புறமாகவும் இழுத்து காதுக் குழாயை நேராக ஆக்குங்கள். (பிள்ளைகள் என்றால், கீழாகவும் பின்புறமாகவும் இழுக்க வேண்டும்).
- மருத்துவர் கூறிய எண்ணிக்கையில் மருந்தை சொட்டு சொட்டாக காதினுள் விடுங்கள். மருந்துச் சாதனத்தின் நுனி (dropper) காதையோ வேறு பகுதியையோ தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- காதை 5 லிருந்து 10 நிமிடங்களுக்கு மேல் நோக்கி வைத்திருங்கள்.
- பஞ்சுக் குச்சி (cotton bud) பயன்படுத்தி குரும்பியை அகற்றுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

முதல் சொட்டு காதில் விடப்படும்போது சிலருக்கு ஒரு வெதுவெதுப்பான சிலிர்த்தல் உணர்வு ஏற்படலாம்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைத் தெரிவியுங்கள். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- மருந்தை 3 நாட்களுக்குப் பயன்படுத்திய பிறகும் குரும்பி நீங்கவில்லை.
- உங்களுக்கு வேறு மருத்துவப் பிரச்சினைகள் இருத்தல்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.